REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 16உ திங்கள் (28—2—55) ★ ★ வெளியூர்: மாசி 17உ செவ்வாய் (1—3—55) [இதழ் 220

32,000 சதுர மைலில் வெள்ளம் விளைவித்த கோரம்!

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நியூ சவுத் வேல்ஸில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, 32,000 சதுர மைல் பரப்பில் பரவியுள்ளதாம்! சில மாவட்டங்களில் செழுமையான விவசாயப் பிரதேசங்கள் யாவும் பாழாகிவிட்டனவாம்! ஏராளமான ஆடுகள், வெள்ளத்தில் மூழ்கிவிட்டனவாம்! பலர் உயிர் நீத்தனர் என்றும், ஏராளமான பேர் காணவில்லையென்றும் செய்திகள் கூறுகின்றன.

வடநாட்டுப் பொருளை வாங்காதீர்!

வெள்ளையனைப் போலவே வடவரும் தென்னாட்டை மார்க்கட் ஆக்கியுள்ளனர்

கோழைகள் வீரர்களை ஆள அனுமதிப்பதா?

சல்லிப்பட்டியில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அறைகூவல்

"இங்கே—தென்னாட்டில் தங்கம், இரும்பு கிடைத்தும் தரித்திரமும்—இல்லாமையும் நிலவுவதேன்? ஓவியம், காவியம் தீட்டவும், பாடவும், காணவும் உள்ள இயற்கைக் காட்சிகளையும் இங்கே பார்க்கலாம்; கரும்பு, புகையிலை, தேயிலை விளைகின்றது; உழைக்கின்றோம்—இருந்தாலும் உருக்குலைக்கப்படுகின்றோம்; ஏன்? வெள்ளைக்காரன் எப்படி இந்தியாவை அடிமைக் காடாக்கினனோ, அப்படியே வடநாடு, தென்னாட்டைச் சுரண்டி, மார்க்கெட்டாக்கி, மக்களை பகல் பட்டினி, இராப் பட்டினி ஆக்கி உள்ளது. இங்கேதான் நெசவுத் தொழில், உழவுத் தொழில் மேலோங்கி இருந்தது; ஆனால், இன்று அழிந்து வருகின்றது—ஏன்? தொழில் இல்லாத காரணத்தாலா? அல்ல! நம்மிடத்திலே அதிகாரம் இல்லாத காரணத்தால்! இதனால் தான் நம் நாட்டு மக்கள் மலேயா, இலங்கை நாடுகளுக்குக் கூலிகளாகப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. அதிகாரம், உரிமை நம்மிடத்திலேதான் இருக்க வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு மத்திய சர்க்காருக்கு 400 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது; இது, வெள்ளைக்காரனுக்குக் கிடைத்ததைவிட அதிகம்; குவிகின்ற 400 கோடியில் 208 கோடி பட்டாளத்துக்கு செலவழிக்கின்றார்கள்—ஏன், இந்த நாட்டில் தரித்திரம் தாண்டவமாடாது? விவசாயி, ஆலைத் தொழிலாளியின் செல்வநிலை வளர, தொழில் வளம்பெற இம்மாநிலத்திற்கு அதிகாரம் வேண்டும்; வடநாட்டு சாமான்களை நாம் வாங்கக்கூடாது; சோப்பு, துணி, மருந்து ஆகியவைகள் வடநாட்டு சரக்காக இருந்தால் 'வேண்டாம்' என்று சொல்ல வேண்டும்,"

—என்று, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 23—2—55ல், சல்லிப்பட்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் எச்சரித்தார். தொடர்ந்து அவர் கூறியதாவது :—

"எல்லைப்புறத்திலே கபார்கான், பாஞ்சாலத்திலே லாலா லஜபதிராய், மகாராஷ்டிரத்திலே லோகமான்ய திலகர், சென்னையிலே ஆச்சாரியார், சேலத்திலே டாக்டர் வரதராஜுலு, ஈரோட்டிலே பெரியார் இராமசாமி என்று தேசீயத் தலைவர்கள் கிளம்பி, நாடெங்கும் தொண்டர்களைத் திரட்டி 60,000-க்கு மேற்பட்டவர் சிறை சென்று, அதற்குப் பிறகுதான் சுயராஜ்யம் கிடைத்தது.

"புலி வேட்டைக்கு 4, 5 பேர் போகின்றார்கள்—புலியை ஒருவர் துரத்தி, மற்றொருவர் சுட்டு, இன்னொருவர் தூக்கிக்கொண்டு வந்து, அதை ஓர் இடத்தில் வைத்துத் தோலை உரித்த பிறகு, அவர்களிலே ஒருவர், 'இந்தத் தோல் எனக்குத்தான் சொந்தம்; இந்த இடத்திலே ஓர் ஆசிரமம் கட்டி, இந்தத் தோலை இங்கே விரித்து, அதன் மேல் நான் தவம் செய்ய இருக்கின்றேன்,' என்று கூறினாராம்!

"இப்படி ஓர் எத்தன் சொன்னால் யார் நம்புவார்கள்? அப்படி எல்லோரும் சேர்ந்து பெற்ற சுயராஜ்யத்தை, நேரு காவியணியாத பண்டாரமாக இருந்துகொண்டு, 'சுயராஜ்ய ஆசனம் எங்களுடையது' என்கிறார். எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

"வடநாட்டு ஏகாதிபத்தியம் தென்னாட்டை அடிமைக் காடாக்கி, சாவடியாக்கி, சந்தையாக்கி வருகின்றது—என்று பகிரங்கக் குற்றம் சாட்டுகின்றோம். இவர்கள் என்ன, அப்படித்தான் ஆற்றலில் சிறந்தவர்களா? வீரத்தில் திளைத்தவர்களா? இல்லையே! 'வடநாட்டான் தோற்றான்' என்றுதான் சரிதம் கூறுகின்றது—கிரேக்க அலெக்சாண்டர், செங்கிஸ்கான், தைமூர், கஜினி ஆகியவர்கள் படையெடுத்து வடநாட்டை வென்றதாகத் தானே சரிதம் கூறுகின்றது?

"தென்னாட்டு வரலாற்றில், தமிழ்க் காவியமான சிலப்பதிகாரம்—சேரன் செங்குட்டுவனின் வெற்றியைக் கூறுகின்றது; தோல்வியடைந்த பரம்பரை, வென்ற வீரர்களை அடக்கி ஆள்வது என்றால், என்ன நியாயம்? 'கோழை, வீரனை ஆள்வதா? அவர்கள் தரும் இன்னல்களையும், இழிவுகளையும் நாம் ஏற்பதா?

"வெள்ளைக்காரன், மக்களின் விடுதலை ஆர்வத்தைப் பார்த்து, உலக சூழ்நிலையைக் கவனித்து, இந்தியாவை விட்டுப் போனான்;—வடவர் கையில் ஆட்சி சிக்கியவுடன், 'தென்னாட்டு வரிப் பணம், பெரும் பங்கு டெல்லிக்கு வரவேண்டும்,' என்கின்றனர். பணம், அதிகாரம் இரண்டும் அவர்கள் கையில்; 1,500 மைல் வடக்கு—தெற்கும், 1,200 மைல் கிழக்கு—மேற்கும் உள்ள நாட்டை மத்திய சர்க்கார்—டெல்லி சர்க்கார் ஆட்டிப் படைக்கின்றது; சென்னை மாநிலம் விதவைக் கோலமாக்கப்பட்டுள்ளது.

"நிலவரி, விற்பனை வரி இரண்டும்தான் சென்னை சர்க்காருக்கு; கோவை ஆலை முதலாளிகள், உடுமலை மில் முதலாளிகள் தரும் வருமான வரி, ரப்பர், புகையிலை, தேயிலை, காப்பி, தீக்குச்சி வரிகள், ரயில், ஆகாய விமான வருமானம், ஏற்றுமதி—இறக்குமதி வரி, கடலோர வாணிப வரி அத்தனையும் டெல்லிக்கு; இப்படி இருந்தால், தென்னாடு எப்படி வாழ முடியும்? பாலம், பள்ளிக்கூடம், தொழில் இல்லாத இடத்திற்கு தொழிற்சாலை—எப்படிக் கட்ட முடியும்? சட்டசபையில் செய்யும் எந்தக் காரியமானாலும், டெல்லி அனுமதி தரவேண்டும் என்ற நிலையில்தான் இம்மாநிலம் உள்ளது?

"நமது நாட்டில் தரித்திரம் தாண்டவம் புரிய காரணமென்ன? உழைக்காமல் இருக்கின்றோமா? பிரான்ஸ் நாடு திராட்சைப் பழத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றது; சுவிட்சர்லாந்து கடிகார உற்பத்தியை மட்டுமே நம்பி வாழ்கின்றது; பின்லாந்து காகிதம் செய்யும் தொழிலையே நம்பி வாழ்கின்றது; டென்மார்க் பால் பண்ணையை மட்டுமே நம்பி வாழ்கின்றது—இப்படி இந்த நாடுகள் ஒரே தொழிலை மட்டுமே நம்பி வாழ்கின்றன. அங்கே பகல் பட்டினி, இராப் பட்டினி இல்லை; தொழிலாளருக்குத் தொல்லை இல்லை; இங்கே சேலத்திலே இரும்பு; தென் ஆற்காட்டில் நிலக்கரி (பெட்ரோல் ஊற்றப்பட்ட மோட்டார் போல்) கோலாரிலே தங்கம்—இப்படி எல்லாம் உள்ளது. இவைகளைக் கொண்டு இரண்டு மாவட்டத்தை மட்டுமல்ல—மாநிலத்தையே வளமாக்கலாம்; ஆனால் தென்னாடு உதாசீனம் செய்யப்படுகின்றது."

(4-ம் பக்கம் பார்க்க)

சாதிப் பாகுபாட்டினை வளர்க்கும் கோவில்கள்!

கொச்சியில் அனுபவித்த சம்பவம்!

அண்ணா தரும் விளக்கம்

"கோச்சிக்கு ஒருமுறை நானும், நண்பர் குருசாமியும் சென்றிருந்தோம்; அப்போது அங்கு சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் திவானாக இருந்தார்—இன்றைக்கு 12 ஆண்டுகளுக்கு முன்; ஆர். கே. எஸ். அவர்கள் ஊரில் இல்லாவிடினும், எங்களுக்கு வேண்டிய வசதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் போயிருந்தார்; நானும் நண்பர் குருசாமியும் சுற்றிப்பார்த்து வருவதற்காக ஒரு கோவிலுக்குச் சென்றிருந்தோம்; அங்கு, எங்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை; 'நாங்கள் யார் தெரியுமா—திவான் வீட்டிலிருந்து வருபவர்கள்' என்று கூறினோம்; அங்கிருந்த கோவில் நிர்வாகிகள், 'அதனால்தான் நீங்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்கிறோம்; திவான் ஒரு செட்டியார்; அவர் வகையினரான செட்டியார்கள், இந்தக் கோவிலுக்குள் வரக்கூடாது,'—என்று கூறினார்கள்; உடனே, 'நாங்கள் செட்டியார்களல்ல; அங்கு விருந்தாளிகளாய் வந்திருப்பவர்கள்; அவ்வளவுதான்,' என்றோம்; பின்னர் தான் எங்களை உள்ளே அனுமதித்தார்கள்.

"ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், கோவில்களில் இப்படி சாதிப் பாகுபாடுகள் நிலைநாட்டப்பட்டு வருகின்றன; கோவில்களின் நிலையே இப்படி என்றால், நாட்டு நிலைமை என்னவாயிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

"இந்தச் சாதிப் பாகுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டாமா? கோவிலுக்கும், திருக்குளத்திற்கும் செல்வம் செலவிடப்படும் நிலை மாறி, அவை, கல்விக்கும், மருத்துவ வசதிகளுக்கும் செலவிடப்படுகிற நிலை வளர வேண்டாமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்."

—என்று, 21—2—55 அன்று குமாரபாளையம் தி. மு. கழக சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"குமாரபாளையத்தில் அடிக்கடி அரசியல் கூட்டங்கள் நடைபெறுவதாகக் கேட்டு மகிழ்கின்றேன். நாட்டில் அவ்வப்போது எழும் பிரச்சினைகள் குறித்து பலரும் மக்களுக்கு விளக்குவதினால் மக்கள் அரசியல் தெளிவு பெறுவது சாத்தியமாகிறது.

கழகத் தோழர்கள் கவனத்திற்கு !

"இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்குகிற தோழர், நான் அதிக நேரம் பேசவேண்டும் என்பதால் இதரர்கள் பேசுவதைச் சுருக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறினார்.

"ஒரு கூட்டத்தில் 3 அல்லது 4 சொற்பொழிவாளர்கள் கிடைப்பது, 'இரட்டை நாதசுரம் கிடைத்ததுபோல' என தோழர்கள் எண்ணவேண்டும்.

"தி. மு. கழகத்தின் சார்பில் யார் பேசினாலும், அவர்கள் ஒரே கருத்துடன்தான் விஷயத்தைச் சொல்லுவார்கள்.

"நாதசுரத்தில் யார் வாசித்தாலும், கீர்த்தனைகளும், பாடல்களும் இராகங்களும், தாளங்களும் ஒன்றாக இருப்பதைப்போல, தி. மு. கழகத் தோழர்கள் பேசுவது ஒரே இலட்சியத்தை, ஒரே கொள்கையைத்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. வேண்டுமானால் பலர் கீர்த்தனங்கள் வாசிப்பதில், சிலரிடம் சற்று நயமிருக்கலாம்; அவ்வளவுதான்;

"அண்ணாதுரைதான் அகப்பட்டுக் கொண்டாரே! அவரையே மணிக் கணக்கில் பேசச் செய்வோம்" என்பது, என்மீதும் அக்கறை கொண்டதாகாது; லட்சிய விளக்கம் பெறுவதற்கும் முழுப் பயன் தரத் தக்கதாயிருக்காது.

"ஏனெனில் நானே எல்லாப் பிரச்சினைகளையும், கருத்துக்களையும், புள்ளி விவரங்களையும் ஒரே சமயத்தில் கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் தருவது என்பது முடியாத காரியம்.

"எனக்கு முன்னாலே பேசிய தோழர் பொன்னம்பலனார் அவர்கள் நீண்டநேரம் பேசியிருந்தால், தி. மு. கழகத்தின் சமுதாயக் கொள்கையை வெகு விரிவாக விளக்கியிருப்பார்; அதேபோல தோழர் சம்பத்தும் உங்களுக்கு நல்ல பல கருத்துக்களைக் கூறியிருப்பார்; நான் அவர்களின் பேச்சுக்களில் கூறப்பட்ட கருத்துக்களை விடுத்து வேறு பல கூறமுடியும். ஆனால், அவர்கள் இருவரும் பேசாததினால், அந்தக் கருத்துக்களையும் நானே கூறவேண்டியதாகி விட்டது. இதனால் உங்களுக்கு நஷ்டம்தானே! அதிகமான கருத்துக்களை ஒரே கூட்டத்தில் தெரிந்து கொள்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—2—1955 திங்கள்

என்று அருப்புமோ?

" இந்தியாவில் வாழும் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை," என்று, இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலுங்கூட, தாழ்த்தப்பட்ட மக்கள், 'உயர்ந்த வகுப்பினர்' என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சாதி இந்துக்களாலும், பார்ப்பனக் குடிமக்களாலும் பட்டுவரும் தொல்லைகளுக்கு எல்லையே இல்லை என்பதையும், அந்தத் தொல்லைகள் இல்லாமலாக, 'இந்த சாதி முறைகளை, பிறப்பாலேயே மனிதர்கள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பேதங்களைக் கற்பிப்பவற்றை—அவை நான்கு வேதங்களாயினும், பல மத போதங்களாயினும் சாத்திரங்களாயினும், கடவுட் காதைகளில் வரும் பாத்திரங்களாயினும்—ஒழிக்க வேண்டும்,' என்று நாம் அடிக்கடி கூறி வந்திருக்கிறோம்.

சட்டங்கள் மட்டுமே—அவை எத்தனை நல்ல நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவையாயினும்—எதிர்பார்க்கிற பலனைப் பெற்றுத் தந்துவிட முடியாது என்பதும் இதற்கு முன்பு நாம் எடுத்துக் காட்டாததல்ல.

" நான் வெள்ளையன்—நிறத்தால்;—நீ கறுப்பன்-நிறத்தால்; எனவே, நான் உயர்ந்தவன்; நீ தாழ்ந்தவன்," என்று கூறி, நிற பேதம் பேசி, ஆப்பிரிக்க மக்களை அடிமை கொண்டு, துன்புறுத்தி, இன ஒதுக்கல் செய்து, மனிதப் பண்பிற்கு வெகு அப்பால் சென்று கொண்டிருக்கிற மலான்களை இங்கு—இந்தியாவில் கண்டிக்காதவர் இல்லை.

ஆனால், அங்கு மலான் பரம்பரையினர் செய்யும் கொடுமைகளைவிட அதிகம் இல்லாவிடினும், அதே அளவு கொடுமைகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களை ஆட்படுத்துகிறவர்களையும் மலானைக் கண்டிக்கும் பெருமக்கள் கண்டித்தால் நலமாயிருக்கும்.

வட நாட்டில், குஜராத்திலிருக்கும் ரங்பூர் என்ற கிராமத்தில், ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு நடைபெற்ற திருமணத்தின்போது, வழக்கத்திற்கு மாருக, திருமணப் பாட்டுக்களை 'அரிசன'ப் பெண்கள் பாடினார்களாம். அது கண்டு பொறுக்காத அக்கிராமத்து உயர் சாதியினர் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் ஆத்திரங்கொண்டு, பாட்டுப் பாடின அரிசனப் பெண்களைத் தாக்கியதுடன், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்க முடியாது என்றும் மறுத்து, கட்டு திட்டம் செய்திருக்கின்றனராம். இதுபற்றி சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாம். இதை என்னவென்று சொல்லுவது? இந்த மக்கள் எப்போது 'எல்லோரும் ஒன்றுதான்,' என்ற உயர் எண்ணத்தைப் பெறப் போகிறார்கள்?

ஐதராபாத்திலே இன்னொரு சம்பவம், இதுபோல:

அரிசன குடும்பங்களில் நடைபெறும் திருமண விழாவின்போது, உணவு சமைக்கும் பொறுப்பை ஒரு பார்ப்பனர் வழக்கமாக ஏற்றுக்கொண்டிருந்தாராம். 'மாடு தின்னும் புலையருக்கு மாதவம் புரியும் பார்ப்பனர் சமைத்துப் போடுவதா?' என்று பொங்கி எழுந்த புரோகிதக் கூட்டம், அந்தப் பார்ப்பன சமையல்காரரை எச்சரித்து, பின், 'சாதிப் பிரஷ்டம்' செய்து, பலாத்காரமாக 'பிராயச்சித்த'மும் செய்வித்து, அதன் அறிகுறியாக சமூக விருந்தொன்றும் நடத்தினராம்!

ஆனால், அங்கிருந்த பார்ப்பன இளைஞர்கள், வைதிகப் பார்ப்பனரின் செய்கை 'கடைந்தெடுத்த முட்டாள் தனம்' என்று கூறி, சமூகப் பொது விருந்தில் கலந்துகொள்ளச் சென்ற பார்ப்பன 'போஜனப் பிரியர்'களுக்கு, 'போக வேண்டாம் விருந்திற்கு'—என்று போதனை செய்து மறியலும் நடத்தியிருக்கின்றனர்.

அரிசனங்களும், தங்கள் பங்கிற்கு, இந்த வைதிகப் பார்ப்பனப் பழைமைவிரும்பிகளுக்கு உதவியாக எந்த வேலையும் செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

பார்ப்பன இளைஞர்களின் செய்கை பாராட்டுதலுக்குரியது; வைதீக வெறியர்களின் அகம்பாவம் கண்டனத்திற்குரியது.

தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கும் தொல்லைகள் பல பற்றி, அடிக்கடி வந்துகொண்டிருக்கும் செய்திகளில், இவை இரண்டும் இடம் பெற்றுள்ளன. சட்டம் இருக்கத்தான் செய்கிறது, 'சாதியால் தாழ்ந்தவன் என்று ஒதுக்கினால் தண்டனை கிடைக்கும்'—என்று; என்ன பயன்?

அறியாமையால் பலரிடத்திலும் போலிப் பெருமையின் மோகத்தால் சிலரிடத்திலும், வரட்டு மமதையால்—முரட்டுப் பிடிவாதத்தால் இன்னுஞ் சிலரிடத்தும், பிறரை வஞ்சித்து, மேனி வாடாது வாழும் வகைக்காக சிலரிடத்திலும் 'உங்களைக் காட்டிலும் நாங்கள் பிறப்பாலேயே 'உயர்ந்தவர்கள்,' என்ற எண்ணம் நிலவுகிறது. அந்த அகந்தை மிகுந்த எண்ணம், என்று அழிந்து படுகிறதோ அன்றல்லவா 'நீங்களும் நாங்களும் ஒன்றுதான்' என்ற உத்தம எண்ணம், உயர்ந்தவர் என்று இன்று தங்களைக் கூறிக்கொள்வோரிடம் அரும்பும். அப்போது தானே தாழ்த்தப்பட்டவர் என்ற இழிவு நீங்கும்; அவர்கள் படும் அல்லல் அகலும்.

'உயரியவர்கள் நாங்கள்,' என்ற அவசியமற்ற அநாகரிகமான அகந்தையை, உயர்ந்தோர் என்போர் உள்ளம் பூண்டுவரும் மறுமலர்ச்சிக் கோலத்தைக் கண்டாவது தாங்களாக விட்டொழிக்கவேண்டும் என்று நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம்.

ஐதராபாத் பார்ப்பன இளைஞர்கள் துணிவுடன் தங்கள் இனத்தவரின் செய்கையைக் கண்டிக்க முன் வந்தது பாராட்டலுக்குரியது. அவர்களைப் போலவே நாடெங்கணுமுள்ள பார்ப்பன இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தவர் கொண்டுள்ள உயர்ந்தவர் என்ற அகந்தையை விட்டொழிக்கச் செய்ய பாடுபட முன்வரவேண்டும் என்று நாம் பன்முறையும், பன்னெடுங்காலமாய் கூறிவருகிற கருத்தை, மீண்டும் வலியுறுத்துகிறோம். எல்லோரிலும் நானே உயர்ந்தவன் என்ற மமதை எண்ணத்தை பார்ப்பன சமூகம் எப்போது விட்டொழிக்கிறதோ, அப்போதுதான் அவர்கள் அடுத்தடுத்து கற்பித்து வைத்திருக்கிற இதர சாதி இந்துக்களும் தங்களின், உயர்ந்தவர் என்ற அகந்தை எண்ணத்தைக் கை விடுவர். இது நடைபெறுகிற வரையில், மக்கள் சமூகம் நாகரீகம் பெருது; நலமுமடையாது.

ஒன்றே சமூகம் என்றே எண்ணார்க்கு இறுதி என்பது உறுதி உறுதி! என்று நாம் அறுதியிட்டுச் சொல்கிறோம்.

கல்வியின் நோக்கம் ஆதாரக் - கல்வியால் நிறைவேறவில்லை!

டாக்டர் ரத்தினசாமி கருத்து

" ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளி திறப்பதின் மூலம் முதன் முதலில் கல்வி பரப்புவதில் கல்வி சீர்திருத்த ஆய்வுக் குழு கவனம் செலுத்த வேண்டும்.

" கைத்தொழில் கற்றுத் தருவதென்பது, அந்தத் தொழில் மட்டும் தெரிந்தவர்களால் இயலாது. அது, அந்த தொழில் பயின்றுள்ள ஆசிரியர்களால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

" இதற்கு ஐந்து வருட பயிற்சி அவசியமாகத் தேவை.

" ஆதாரக் கல்வியினுல் முயற்சிக்கப்படுகிறபடி, உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்வதுதான் கல்வியின் நோக்கமாக இருக்க முடியாது. அது குழந்தைகளை, கொடுமைக்கு ஆளாக்குவதாகும்.

" பல பள்ளிகளில் இப்போதிருக்கிற வகையில் கைத்தொழில் என்பது, நூற்றலும், நெய்தலும் மட்டுமாகவே இருக்க முடியாது. சூழ்நிலைக்கும், குழந்தைகளின் திறமைக்கும் ஒப்ப, தொழில்களில் பல ரகங்கள் கற்றுத்தரப்படலாம்."

இவ்வாறு, அண்ணமலை பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணை வேந்தரான டாக்டர் எம். ரத்தினசாமி அவர்கள் டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்வி சீர்திருத்த ஆய்வுக் குழுவிடம் தனது கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

ஆந்திர தேர்தல்:

அரிசனங்கள் வாக்குப் பதிவு செய்யத் தடை?

நெல்லூர், பிப். 23—

நடைபெற்றுவரும் ஆந்திரத் தேர்தலையொட்டி 'புச்சிரெட்டி பாளையம் தொகுதியில் நடைபெர்ற வாக்குப் பதிவின்போது, பல அரிசனங்கள் வாக்குப் பதிவு செய்வதினின்றும், தடுக்கப்பட்டார்கள் எனக் கூறப்படுகிறது.

புச்சிரெட்டிபாளையம் ஒரு இரட்டை உறுப்பினர் தொகுதி; அங்கு காங்கிரஸ், கம்யூனிஸ்டு அபேட்சகர்களிடையே கடும் போட்டியிருந்துவருவதாகத் தெரிகிறது.

நிர்ப்பந்திக்கப்பட்டதின் விளைவாக பல அரிசனங்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யவில்லையாம்.

அகில உலகத்துக்கும் அகிம்சையை போதிப்பது ஆதாரக் கல்வி

டாக்டர் குமரப்பா கருத்து

குழுவினர் கல்லுப்பட்டியில் உள்ள சாந்தி நிகேதனிலிருக்கும் ஆதாரப்பயிற்சிப் பள்ளிக்குச் சென்றபோது அங்கு தங்கியிருக்கும் ஜே. சி. குமரப்பா கூறியதாவது:—

'இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள மக்களின் மனதில் அகிம்சை உணர்வை நிலைபெறச் செய்வதுதான் ஆதாரப் பள்ளியின் வேலையாகும்.

(1) சுயதேவைப் பூர்த்தி (2) சுயகட்டுப்பாடு (3) தன் கையே தனக்குதவி ஆகிய மூன்று நோக்கங்களைக் கொண்டதாகும் ஆதாரக் கல்வி.

டெல்லி மக்கள் சபையில்......

நெய்வேலி திட்டம்: மத்திய சர்க்கார் பொறுப்பு

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டுவதற்கான பரீட்சார்த்தத் திட்டம்; அதன் பின்னர் நிர்மாணிக்கப்படுவதென கருதப்படும் விரிவான சுரங்கத் தொழிற்சாலை ஆகிய இரண்டு திட்டங்களுக்குமே மத்திய சர்க்கார் பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று மத்திய சர்க்கார் உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி டெல்லி மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'பழுப்பு நிலக்கரி ஆலையுடன் எஃகு ஆலை ஒன்றையும் அமைக்க ஆலோசிக்கப்படுகிறதா'? என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர், 'இது மிகவும் அதிகமாக யோசிப்பதாகும்' என்றார்.

நெய்வேலியில் சுரங்க ஆலை அமைக்கப்பட்ட பின்னர், தென்னாட்டு எரி பொருள் பிரச்சினை கணிசமாகத் தீரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை சட்ட சபையில்...

★

பழுப்பு நிலக்கரி

தென்னற்காடு மாவட்ட பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் நிலைமை தெரிந்தவுடன், அத்துடன் இணையப்பெற்ற ஒரு இரசாயன உர உற்பத்தி ஆலையைத் திறப்பதெனவும் ஒரு யோசனை சர்க்காருக்கு இருந்துவருவதாக அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆலையை, தனிப்பட்டவர்களை ஏற்று நடத்துவதா, அல்லது வேறு எவ்விதத்தில் என்பது பற்றி இப்போது சொல்வதற்கில்லை என்றும், நெய்வேலி திட்டத்தின் நிலைமை பற்றிய முழு விவரமும் கிடைத்த பின்னரேதான் சொல்ல முடியும் என்றும் கூறினர்.

உரம் அவ்வப்போது வருகின்ற நேரத்திலெல்லாம் அதை உடனடியாக வினியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்றும், சென்ற ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதியன்று கிடைத்த 41,000 டன் உரத்தில் 31,000 டன் உரம் வினியோகிக்கப்பட்டிருக்கிறதென்றும், பாக்கி 10,000 டன் உரமும் அண்மையில் வந்திருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

'தேவைப்படுகிற நேரத்தில் உரம் கிடைக்கவில்லை, தாமதமாகக் கிடைக்கிறது' என்ற புகார் சரியல்ல என்றும், எங்காவது குறைகள் இருந்து கோரிக்கை வந்தால் அது உடனடியாகவே கவனிக்கப்பட்டு வருகிறதென்றும் கூறினர்.

விலை குறையும்?

உர விலையைக் குறைப்பதுபற்றி இந்திய சர்க்காரிடம் கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது என்றும், அவர்களே இதைக் கவனித்துக் கொள்ளலாமென்றும் கூறினர்.

சென்னை அரிசி

சென்னை அரிசிக் கிடங்குகளிலிருக்கும் 1,10,000 டன் அரிசியில் 55,000 டன் அரிசியை மத்திய சர்க்கார் இதுவரையும் வாங்கியுள்ளதென்றும், இதற்கான விலை பற்றி இந்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்குமிடையே கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்று வருகிறதென்றும், அமைச்சர் பக்தவதசலம் தெரிவித்திருக்கிறார்.

இந்த விலை நிர்ணயமாகிற வரையிலும் சென்னை சாக்கார் இலாய நஷ்டம் பற்றிக் கூற முடியாது என்றும், மாநில சர்க்காரிடமுள்ள இந்த சரக்குகளை மத்திய சர்க்கார் வாங்குவது, விலை நிர்ணயம் காரணமாகத் தாமதப்படாதென்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர், மலையாள மாவட்டத்தில் அரிசி விற்பனையின் விளைவாக ரூ 27 லட்சம் சர்க்காருக்கு நஷ்டமேற்பட்டுள்ளதென்றும், இந்த நஷ்டத் தொகை முழுவதையுமே மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் (1954) ஒரிசா, ஆந்திரா, உத்தர பிரதேசம், குடகு ஆகிய இடங்களிலிருந்து சென்னைக்கு அரிசி இறக்குமதி செய்யப்பட்டன என்றும் அறிவித்தார்.

புழலேரி நீர்

சென்னை நகரசபையின் கோரிக்கையைக் கவனித்து புழலேரி (ரெட் ஹில்ஸ்) தண்ணீர், அசுத்தம் செய்யப்படுகிறது என்ற புகார் வெறும் மனே உணர்ச்சியின் காரணமாகச் செய்யப்பட்டுள்ளதுதான் என்ற போதிலும், விசேட ஆயுதம் தாங்கிய போலீசாரின் முகாமை குறுக்கி, கிழக்குப் பக்கமாக மாற்றி அமைக்கப் பட்டுவிட்டதென்றும், இப்படை முகாமை வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்ற விஷயம் அரசாங்கப் பரிசீலனையிலிருக்கிறது என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

புகார்கள் வந்தனவா?

சென்னை-பைத்தியக்காரர்களுக்கான மருத்துவ விடுதியில் இருக்கும் நோயாளிகளுக்குத் தரப்படும் பொருட்கள் உபயோகப்படுத்தப் படாமல் துஷ்பிரயோகம் செய்யப் படுவதாக சர்க்காருக்கு ஏதாவது புகார்கள் வந்துள்ளனவா? என்று கேட்கப்பட்டபோது அமைச்சர் ஏ. பி. ஷெட்டி இல்லை என்று பதிலளித்தார்.

ஏன் கலக்கப்போகிறார்கள்?

தேசீய நாடக விழா பற்றி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கலந்தாலோசித்தது கிடையாது என்று அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில் மொத்தம் 2,23,059 மின்சார விசிறிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1953-ம் ஆண்டில், 1,99,468 விசிறிகளே உற்பத்தியாயின.

பகட்டான உடையில் - - பகற் கொள்ளையர்!

600 ரூபாயுடன் கம்பி நீட்டினர்!

ஐதராபாத், பிப். 25—

மேல் நாட்டுப் 'பாணி'யில் நாகரீக உடையணிந்து கொண்டு மூன்று 'பேர்வழி'கள், இங்குள்ள பஷீர்பாக்கில் உள்ள 'இந்தியன்' ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷன்' புக்கிங் நிலைய கணக்கரை (காஷியர்) 'முட்டாளா'க்கி, அவரை ஏமாற்றி 600 ரூபாயுடன் கம்பி நீட்டிவிட்டனராம்!

மேற்படி மூன்று பேர்வழிகளும் அந்தக் காரியாலயத்திற்கு வந்து, தாங்கள் பம்பாய் செல்வதுபோல் 'தோரணை' காட்டிக்கொண்டு, பம்பாயிக்கு விமானக் கட்டணம் எவ்வளவு என்பது பற்றி விசாரித்துக்கொண்டனராம். இதற்குள் ஒரு பேர்வழி, ஒரு சிப்பந்தியை தண்ணீர் கொண்டுவரும்படியும் மற்ரொரு பேர்வழி, இன்னொரு சிப்பந்தியை சிகரெட் வாங்கிவரும்படியும் அனுப்பினராம்.

அந்த இரு பியூன்களும் வெளியே சென்றதும், மேற்படி பேர்வழிகள், காஷியரிடம் சென்று 100 ரூபாய்க்குச் சில்லறை கேட்டனராம். அந்த நோட்டைப் பெற்றுக் கொண்ட காஷியர் பத்து 10 ரூபாய் நோட்டுக் கத்தை ஒன்று கொடுத்ததாகவும், நோட்டுகளை வாங்கிக் கொண்ட ஒரு பேர்வழி, அந்த நோட்டுகள் கசங்கி இருப்பதாகக் குறை கூறிக்கொண்டு வேறு புதிய நோட்டுகள் தரும்படியும் கேட்டாராம். இவ்வாறு பரிமாற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இரண்டாம் பேர்வழி சிகப்பு வர்ணம் கொண்ட ஐதராபாத் பத்து ரூபாய் நோட்டுகள் இருக்கின்றனவா என்று கேட்கவும், காஷியர் ஐதராபாத் நோட்டுகளுக்காகத் தேடிக்கொண்டிருக்கையில், கசங்கிய கத்தை நோட்டுகளையும் புதிய ரூபாய் நோட்டுகளையும் வைத்திருந்த இரண்டு பேர்வழிகளும் 'ஜாலி'யாக வெளியேறிவிட்டனராம். இதற்குள் மூன்றுவது பேர்வழி காஷியருக்கு உதவி புரிவதுபோல் நடித்து, தானும் இரும்புப் பெட்டியில் கையைப் போட்டு ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளை எடுத்துக்கொண்டு 'சரேலென்று' ஓடிவிட்டாராம்!

திக்பிரமை கொண்ட காஷியர் சத்தம் போடுவதற்குள்ளாகவே பலே 'பேர்வழி'கள் மூவரும் எங்கோ மாயமாய் மறைந்துவிட்டனராம்!

ஈராக்-துருக்கி ஒப்பந்தம்!

பாக்தாத், பிப். 24—

ஈராக்—துருக்கி கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கையொப்பமிடப்பட்டு விட்டன என்று செய்திகள் அறிவிக்கின்றன.

இவ்வொப்பந்தத்தை எகிப்து, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் பலமான ஆட்சேபணைகள் தெரிவித்தும்கூட, ஈராக் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட சம்மதம் தந்துவிட்டது.

இவ்வொப்பந்தம் அங்கீகாரம் பெறவேண்டி அடுத்த வாரத்தில் ஈராக் மக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

இது, பாகிஸ்தான் — துருக்கி கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு மற்ரொரு இணைப்பு ஒப்பந்தமேயாகும்.

எகிப்தின் புதிய தற்காப்புத் திட்டம்?

அரபு நாடுகளின் இக்கூட்டு ஒப்பந்தத்தினின்றும் ஈராக்கை விலக்கி விடும்படி எகிப்து சர்க்கார் கோரும் என்று கூறப்படுகிறது

இராக் தவிர மற்ற அரபு நாடுகளின் கூட்டம் விரைவிலேயே நடத்தப்படும் என்றும், இக்கூட்டு ஒப்பந்தத்திலிருந்து ஈராக்கை விடுவிக்காவிட்டால், தான் அதினின்றும் விலகிக் கொள்ளப் போவதாகவும் எகிப்து சர்க்கார் கூறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம். எகிப்து விலகினால், தாங்களும் விலகி விடுவதாக, சவூதி அரேபியா, எமன் ஆகிய நாடுகளும் ஏற்கனவே கூறியிருக்கின்றன.

ஈராக்கை, இக்கூட்டு ஒப்பந்தத்தினின்றும் விலக்காவிடில், ஒப்பந்தத்தின் கீழ் ஈராக்குக்குத் தான் ஒப்புக்கொண்டுள்ளவைகளை எல்லாம் எகிப்து நிராகரித்து விடுவதோடு, அரபு நாடுகளுக்கு மற்றொரு புதிய தற்காப்புத் திட்டத்தை வழங்க முன்வரலாமென்றும் கூறப்படுகிறது.

மேற்கு நாடுகளின் சூழ்ச்சி?

வரவிருக்கும் 'எந்த நிலைக்கும்' தயாராக இருக்குமாறு எகிப்து இராணுவத்திற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதென எகிப்து இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார் அல்லவா?

துருக்கி—சிரிய எல்லைக்குள் துருக்கிப் படைகள் வந்து குவிந்து கொண்டே இருப்பது, எகிப்தை, துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்தப்படுத்த மேற்கத்திய நாடுகள் செய்யும் சூழ்ச்சியின் முதற்படி என்று அவ்வதிகாரி கூறினார்.

ஆனால் இச்செய்தியை சிரிய அரசாங்க அதிகாரி மறுத்துள்ளார். சரியான வாய்ப்புகள் கிடைக்கிறபோது தங்கள் காரியங்களை சாதிக்க விரும்புகிறவர்கள் கிளப்பிவிடும் 'சரடு' இது என்று அவ்வதிகாரி கூறியிருக்கிறார்.

இந்தியாவின் மக்கள் தொகை

1951-ம் ஆண்டின் இந்திய சர்க்காரின் மக்கள் தொகை கணக்கு விவரம் 2-பி. பிரிவில் கீழ்க்கண்ட விவரங்கள் காணப்படுகிறது :—

"இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 35 கோடி 66 லட்சமாகும்; இதில், 24 கோடி 91 லட்சம் பேர் (69·8 சதவிகிதத்தினர்) விவசாயிகளாவர்; பாக்கி 30·2 சதவிகிதத்தினரும் விவசாயிகளல்லாதவராகும்.

24 கோடி 91 லட்சம் விவசாயிகளில் 7-கோடி 10 லட்சம் பேர் தான் தங்கள் தேவைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளக்கூடியவர்கள்; 14-கோடி 70-லட்சம் பேர் தங்களுக்கென சொந்த ஊதியங்களெதுவுமில்லாமல், முன் குறிப்பிட்ட 7 கோடி 10 லட்சம் விவசாயிகளை நம்பி வாழ்பவர்கள்; மீதியுள்ள 3 கோடி 11 லட்சம் பேரும் ஓரளவுக்குச் சம்பாதித்துக் கொண்டு விவசாய வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள்.

அடுத்து, விவசாயத்தில் ஈடுபடாமல் மற்ற துறைகளில் இருப்போர் எண்ணிக்கை 10 கோடி 75 லட்சமாகும்; இதில் 3 கோடி 33 லட்சம் பேர் (31 சதவிகிதத்தினர்) தங்கள் தங்கள் தேவைகளை தாங்களே தீர்த்துக் கொள்பவர்கள்; 6 கோடி 73 லட்சம் பேர் (62·7 சதவிகிதத்தினர்) சொந்த சம்பாத்தியமெதுவுமின்றி மேற்கண்ட 3 கோடி 33 லட்சம் பேரையும் நம்பி வாழ்பவராகும்; மீதியுள்ள 69 லட்சம் பேரும் (6·4 சதவிகிதத்தவர்) ஓரளவுக்குச் சம்பாதித்துக் கொண்டு இவர்களைச் சார்ந்து வாழ்பவர்களாகும்.

பொதுவாக, விவசாயமில்லாத வேலைகளில், சுதந்திரமாகத் தொழில் நடத்துவோர் தொகை அதிகமாகவே இருக்கிறது.

இந்தியாவின் மக்கள் தொகையில், 70 சத விகிதத்தினர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாவர்.

பொது விற்பனை வரிச் சட்டம்

சட்டசபையில் நிறைவேற்றம்

சென்னை, பிப். 25—

இன்று, சென்னை சட்ட சபையில், பொது விற்பனைவரி மசோதா சட்டமாக ஆக்கப்பட்டு விட்டது. இதன் நோக்கம், விற்பனை வரியை முன்கூட்டியே வசூலித்துக் கொள்ள அதிகாரம் அளிப்பதை அசல் சட்டத்திலேயே சேர்த்து விடவேண்டும் என்பதுதான்.

விதி முறை மூலமாக விற்பனை வரியை முன்கூட்டியே வசூலிக்க அதிகாரம் கிடையாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததின் விளைவாகவே இத்திருத்த மசோதா சட்டசபையில் கொண்டு வரப்பட்டது.

இச்சட்டத் திருத்த மசோதா பற்றிய விவாதம் நடைபெறுகையில் அட்வகேட்-ஜெனரல் வி கே திருவேங்கடாச்சாரி சட்டப் பிரச்சினைகளை விரிவாக விளக்கிப் பேசியிருக்கிறார். இச்சட்டத்தில், ஜீவாதார உரிமைப் பிரச்சினையோ, அதிக அதிகாரம் வழங்கும் பிரச்சினையோ கிடையாது என்பதை விளக்கியிருக்கிறார்.

விவாதத்தின்இறுதியில் அமைச்சர் பதிலளித்த பின்னர் மசோதா, ஷரத்துவாரியாகப் பரிசிலனை செய்யப்பட்டது.

சென்ற ஆண்டு வருமான அடிப்படையில் வரியைச் செலுத்தவோ, அல்லது மாதா மாதம் தங்களது விற்பனையின் அடிப்படையிலோ வரியைச் செலுத்தலாமென்றும், அப்படி மாதா மாதம் செலுத்தப்படும் வரித் தொகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும்தான் கணக்குப் பரிசீலனை நடைபெறும் என்றும், விற்பனை வரிச் சட்டத்திலேயே வியாபாரி தமது இஷ்டப்படி வரியைச் செலுத்த விதி இருக்கிறதென்றும், இதை மாற்ற சர்க்காருக்கு உத்தேசமில்லையென்றும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இறுதியாக, 3-வது ஷரத்தின் பரிசீலனையின்போது, விற்பனை வரி விதிக்கப்படுவதற்காக வருமான அளவு ரூ. 40,000 என்று நிர்ணயிக்கப்படவேண்டுமென்றும், வெற்றிலை, வாழை இலை போன்றவைக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்களிக்கப்படவேண்டும் என்றும் பிரரேபிக்கப்பட்ட திருத்தங்களுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர், விதிவிலக்குப் பிரச்சினை இதில் எழவில்லை என்றும், வருமான அளவை மாற்றுவது அசல் சட்டத்தையே மாற்றுவதாகும் என்று கூறி, திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டன.

இடம் தந்தால்தான் இரயில் ஓடும்!

போராடி தனி இரயில் பெற்ற யாத்ரீகர்கள்

ஆமதாபாத், பிப். 25—

அஜ்மீரில் நடைபெறும் திருவிழாவிற்குச் செல்வதற்காக, டெல்லி மெயில் வண்டியில் புறப்படவிருந்த யாத்ரீகர்களுக்கு அந்த வண்டியில் இடம் கிடைக்காமல் போகவே, அவர்கள் இரயில் தண்டவாளத்தின் முன் உட்கார்ந்துகொண்டு, அதிகமான பெட்டிகளைச் சேர்த்து தங்களுக்கும் இடம் தந்தால்தான் டெல்லி மெயில் புறப்பட அனுமதிக்க முடியும் என்று கூறியிருக்கின்றனர்.

பின்னர், இரயில் அதிகாரிகள் எவ்வளவோ கூறியும் அவர்கள் வண்டியை நகரவிடவில்லை. பின்னர், இரயில்வே அதிகாரிகள் வேறு ஒரு ஸ்பெஷல் வண்டி ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி தந்து, டெல்லி மெயிலை புறப்படச் செய்திருக்கின்றனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அதிகாரிகள் தனி ரெயில் ஒன்றை வாக்களித்தபடி யாத்ரீகர்களுக்குத் தர ஏற்பாடு செய்திருக்கின்றனர் என்று தெரிவருகிறது.

'சுதந்திரா' மீது வழக்கு

டால்மியா கம்பெனி மீது அவதூறு பரப்பினராம்!

திருச்சி, பிப். 23—

'சுதந்திரா' என்ற ஆங்கில வார இதழில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்று தங்களின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் நிந்தனை கொண்டதாய் இருப்பதற்காக, அந்த பத்திரிகையாசிரியரான காசா சுப்பாராவ் மீது மான நஷ்ட வழக்கு ஒன்று, டால்மியா சிமெண்ட் கம்பெனிக்காக, அதன் நிர்வாகியான ஆர். என். ராய் என்பார் அரியலூர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 28-ந் தேதியன்று விசாரணை செய்யப்படும் என்று தெரிகிறது.

தூத்துக்குடி துறைமுகத்தின் எதிர்காலம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தூத்துக்குடி துறைமுகத்தைப் பெரியதோர் துறைமுகமாக மாற்றி அமைப்பதற்கான திட்டமொன்றை சேர்த்துக் கொள்ளுமாறு இந்திய சர்க்காரை சென்னை சர்க்கார் வற்புறுத்தி வருவதாக முதலமைச்சர் காமராசர் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

சென்னை மாநிலத்தில், சென்னை துறைமுகத்தைத் தவிர, மாநிலத்தின் தென்கோடியிலும் ஒரு பெரிய துறைமுகம் தேவையாய் இருக்கிறது என்றும், அதற்குத் தூத்துக்குடியைவிட பொருத்தமான வேறு துறைமுகங்கள் இல்லையென்றும், அடுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிச்சயமாக இது பெரிய துறைமுகமாக மாற்றியமைக்கப்பட்டுவிடும் என்றும் கூறினார்.

திருமணங்கள்

20—2—55 காலை 9 மணிக்கு, கொப்பம்பட்டி விவேகானந்தா ரைஸ் மில்லில், தோழர் ச. கணபதி தலைமையில் நடைபெற்ற தோழர் பொன்னுசாமி — தோழியர் முத்துக்கண்ணு திருமணத்தின் போது, தோழர்கள் பலர் 'திருந்திய திருமணம்'என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

தென்னார்காடு மாவட்டம் வையங்குடியில் தோழர் இளைய பெருமாள்—தோழியர் ஆவரணம் திருமணம் தோழர் வரதராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் திருந்திய திருமணமும் பண்டைய திருமணமும்' என்பது குறித்துப் பேசினர். பல தோழர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரைகளும் பரிசுகளும் வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம்நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது - வரப்பெற்றோம் - நன்றி-பொறுப்பாளர்.

(திருமண நாள் குறிப்பிடவில்லை)

* * *

சென்னை—பூவிருந்தமல்லி கீழ் மாநகரத்தில் 20—2—55 காலை 3 மணிக்கு தோழர் எம். சி. நேசன் தலைமையில் தோழர் பி. கிருட்டிணன்—தோழியர் ராதா அம்மையார் திருமணம் நடைபெற்றபோது தோழர்கள் மு. புரட்சிமணி, பி. சின்னசாமி, எம். வைத்திலிங்கம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

* * *

9—2—55ல், சென்னை 18-வது வட்டம் தி. மு. கழகத் தோழர் எல்லப்பன்—தோழியர் சரோசா திருமணம் தோழர் என். வி. நடராசன் தலைமையில்நடைபெற்றது.

ஃ ஃ ஃ

11-2-55 காலை 8½ மணிக்கு, தொளாரில், பெண்ணாகடம் ஆவணப்பதிவாளர் முன்னிலையில், தோழர் வீ. தர்மலிங்கம்—தோழியர் கங்கை திருந்திய திருமணம் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் 'திருந்திய திருமணம்' என்பது பற்றிசொற்பொழிவாற்றினர்.

ஃ ஃ ஃ

11-2-55 காலை 7½ மணிக்கு கிருஷ்ணகிரியில், திரு. ஜி. எச் கோதண்டராம் தலைமையில் தோழர் ஆர். வெங்கடராசலுவின் சகோதரி தோழியர் ஆர். சரோஜா — கோயம்பத்தூர் தோழர் எம். முனிராசு திருமணம் நடைபெற்றது. பிரமுகர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

தாழ்த்தப்பட்டோர் தெரு வழியாக ஆண்டவனின் ஊர்வலம்....

நடைபெறக் கூடாதென 'சாதி இந்து'க்கள் முறைப்பு

திருச்சி, பிப். 25—

திருவானைக்காவிலுள்ள ஜம்புகேசுவர சுவாமியை எந்த வீதி வழியாக ஊர்வலம் எடுத்துச் செல்வது என்பது பற்றி இங்குள்ள அரிசனங்களுக்கும்,ஜாதி இந்துக்களுக்குமிடையே சில தகராறுகள் ஏற்பட்டுள்ளதாகவும், இது விஷயமாக இங்கு நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

அந்தக் கடவுளின் ஊர்வலம் தங்கள் சேரிகள் வழியாகவும் செல்ல வேண்டுமென்று அரிசனங்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள் மாவட்டக் கலெக்டரும் இது விஷயத்தில் குறுக்கிட்டு இருதரப்பினரையும் சமரசமாகப்போக கேட்டுக் கொண்டாராம்.

ஆனால், அந்த இந்துக்கள் முதலில் ஒப்புதல் தந்துள்ளனரென்றும், பின்னர், வழக்கத்திற்கு மாறாக நடந்துகொள்ள முடியாதென்று அவர்கள் கூறி மறுத்து விட்டனரென்றும் அரிசனங்கள் புகார் செய்திருக்கிறார்கள்.

மேற்படி கோவிலுக்கருகில் அரிசனங்களும், சாதி இந்துக்களும் கோஷ்டி கோஷ்டியாக கூடிநின்று கொண்டிருப்பதாகவும், போலீசார் 'உஷாரா'க இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவருக்கு மந்திரிபதவி வேண்டும்

விந்திய பிரதேச மாநில மந்திரி சபையில், அரிசன ஆதி வாசி ஒருவரை மந்திரியாக நியமிக்க வேண்டும் என்று, 12 சட்டசபை உறுப்பினர்களடங்கிய கூட்டமொன்றில் கோரப்பட்டதாகத் தெரிகிறது.

தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் கவர்னர் சந்தானத்திற்கும், முதன் மந்திரி ஷம்புநாத் சுக்லாவிற்கும் கடிதம் வரைந்துள்ளனராம்.

சாதிபாகுபாட்டை வளர்க்கும் கோவில்கள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வது எத்தனை நல்லது என்பதை தலைமை தாங்குகிற தோழர் தெரிந்து கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கதே!

அஸ்திவாரம் வேண்டாமா?

"ஒரு நல்ல கட்டிடம் அமைவதற்கு நல்ல அஸ்திவாரம், இடம் தேவைப்படுவதைப் போலத்தான், நல்ல நாடு அமைய சமுதாயம் நன்ருக இருக்க வேண்டும் என்கிருேம்.

"ஒரு நாட்டு மக்களின் சமுதாய நிலையைப் பொறுத்துத்தான் அந்த நாட்டு மக்களின் அரசியல் இருக்க முடியும்.

"4 அடி உயரமுள்ளவனுக்கு 9 அடி உயரத்தில் பரண் அமைப்பதோ, அல்லது 6 அடி உயரமுள்ளவனுக்கு 2 அடி உயரத்தில் பரண் அமைப்பதோ எவ்வளவு உபயோகமற்றதோ அதைப் போலத்தான் சமூக நிலைக்கொப்ப அமையப்பெருத அரசியலும் பயனற்றதாயிருக்கும்.

"இந்த நாட்டில் இன்றுள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம் என்னவென்று காங்கிரஸ்காரர்களைக் கேட்டால், 'எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கி இருக்கிறது,' என்று கூறிவிடுகிருர்கள்;

"கம்யூனிஸ்டுகளைக் கேட்டால், 'முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டு, தொழிலாளர்களின் அரசு நிறுவப்பட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்,' என்கிருர்கள்;

"ம. சோ. கட்சியினரைக் கேட்டால், அவர்கள், 'இந்த முதலாளிகளை ஒழிப்பதை சாவதானமாகச் செய்தால் அதுவே போதும்,' என்கிருர்கள்.

"ஆனல், நாம் அவர்களிலிருந்து வேறுபட்டவர்களாயிருக்கிருேம்;

நமது வேறுபாடு

"மற்ற கட்சியினர் மக்களைப் புகழ்ந்து பேசிச் சொல்லுவார்கள்; நாம் மக்களிடையே நிலவுகிற குறைபாடுகளை எடுத்துச் சொல்கிறவர்களாயிருக்கிருேம்.

"சோதிடன் தன்னிடம் வருபவர்களுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார்கள்; ஆனல் வைத்தியரோ, தன்னிடம் வருபவர்களின் உடலைப் பரிசோதித்து, அவர் உடலில் உள்ள குறைகளையும் நோய்களையும் எடுத்துக் கூறுவார்.

"சோதிடன் கூறுவது கேட்டு, சுலபத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பெறுவர்; ஆனல், வைத்தியன் கூறுவதில் அப்படி சுலபத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொள்ள மாட்டார்கள்.

"அதே போலத்தான் தி. மு. கழகம் மக்களிடையேயுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லும் போது மக்கள் கோபப்பட்டார்கள்; ஆத்திரப்பட்டார்கள்;

"இந்த நாட்டு மக்களின் கல்வி நிலை என்ன? 100-க்கு 80-க்கும் அதிகமான பேர் இந்த நாட்டில் தற்குறிகள்; ஆனலும், இந்த நாட்டில் கல்விக்கென ஒரு கடவுள், சரசுவதி.

"அதே போல செல்வத்திற்கென ஒரு கடவுள், தனலட்சுமி; ஆனலும், நாட்டில் பெரும்பாலானேர் தரித்திரவான்கள்.

"ஏன் இந்த நிலை? இப்படி காரணங்களைக் காட்டி, மக்கள் தாங்கள் கொண்டிருக்கிற மூடப்பழக்கவழக்கங்களை, பயனற்ற மத நம்பிக்கைகளை விட்டொழிக்க வேண்டும் என இருபது ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிருேம்.

"இதன் விளைவாக—திராவிடர் இயக்கத்தின் பணியின் பலனுக, நாட்டில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

"இங்கு சில நாட்களுக்கு முன், ஒரு பள்ளிக்கூடம் கட்டி முடித்து திறந்திருக்கிருர்கள்; ஆனல், 20 ஆண்டுகளுக்கு முன், இங்கு பள்ளிக்கூடம் கட்டியவர்கள், பள்ளிக்கூடமா கட்டியிருப்பார்கள்—கோவிலல்லவா கட்டியிருப்பார்கள்?

"இந்த நிலை, மாற்றம் திராவிடர் இயக்கத்தின் இடைவிடாத சீர்திருத்தப் பணியின் பலன் தானே! இந்தப் பலனை நாட்டு மக்கள் பார்க்கத்தானே செய்கிருர்கள்?

"அரசியல் லட்சியமாக தி. மு கழகம், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்று கொண்டிருக்கிறது.

"பாஞ்சாலம், வங்காளம், மராத்தியம், தமிழகம், ஆந்திரம் என்றிருந்தவற்றை இருநூறு ஆண்டுகளுக்கு முன் வெள்ளை ஏகாதிபத்தியம் ஒன்ருக்கி, ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்து, 'ஒரே இந்தியா' என்று கூறியது

"பின்னர், அந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டுவதற்காக—ஒரே பட்டாளத்தில் பலரும் பங்கு பெறுவதைப் போல—வங்காளத்திலிருந்து சுபாஷ் போசும், தமிழகத்திலிருந்து வ. உ. சிதம்பரமும், வேறு பல பகுதிகளிலிருந்து பலரும் ஒன்ருகக்கூடி போரிட்டார்கள்.

"வெள்ளையன் வெளியேறியான பிறகும், வெள்ளையன் ஏற்பாடு செய்துவிட்டுப்போன 'ஒரே இந்தியா' என்ற திட்டம் எப்படி நியாயமுடையது என்று கூற முடியும்?

"இன்று, 'இந்திய ஒற்றுமை' என்ற பெயரால் தென்னுட்டு மக்களின் செல்வத்தைஎல்லாம் வடநாடு கொள்ளையிட்டுச் செல்வதையும், வரிகள் மூலமாக மக்களைச் சுரண்டுவதையும், முக்கியமான எல்லா அதிகாரங்களைப் பறித்து வைத்துக் கொண்டிருப்பதால் இந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதையும் நாம் காண்கிருேம்.

வளருகிற கொழுத்த வரிகள்—வடநாட்டுக்கு! தேய்கிற 'வஜா' செய்யும் வரிகள்—தென்னுட்டுக்கு! — என்ற நிலை வடவரின் ஆதிக்கத்தைக் காட்டவில்லையா?

"இந்த நாட்டு மக்களிடமிருந்து பெறப்படும் வரிகள் இந்த நாட்டு மக்களுக்கே செலவிடப்பட வேண்டும் என்பது எப்படித் தவறுடையதாகும்?

"நம்மிடமிருந்து பெறுகிரவைகளைக் கொண்டு, நாட்டின் செல்வ நிலையை உயர்த்தவென்று கூறி திட்டம் தீட்டினர்கள் — 2,500 - கோடி ரூபாய் செலவில்; இந்தத் திட்டத்தில் தென்னுட்டிற்கு எவ்வளவு கிடைத்தது?

"இங்கு ஒரு திட்டம்—பவானி அணைக் கட்டுத் திட்டம்—ரூ. 10-கோடி மதிப்பில்; ஆனல், வடக்கே பெரும் பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களும், தொழிற்சாலைகளும், ஆராய்ச்சிக்கூடங்களும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு வேலைகள் முடிந்து வருகின்றனவே!

"இந்த நிலை, 'தென்னுட்டை வடநாடு அடக்கி 'ஆள்கிறது,' என்பதைக் கூறவில்லையா?

"வெள்ளைக்காரர்களை இங்கிருந்த தேசியவாதிகள் எந்தக் காரணங்களைக் காட்டி வெளியேற வேண்டுமென்ருர்கள்?

"உத்தியோகம் பெற அவனது ஆங்கில மொழி பயிலவேண்டும்; கவர்னர்களை, அவனே, அவனுக்குப் பிடித்தமானவரை நியமிப்பான்; இரும்பு, துணி, மருந்து, சோப்பு, சீப்பு போன்றவை எல்லாம் சீமையில் உற்பத்தி செய்து இங்கு கொண்டுவந்துவிற்றுக்கொள்ளையடிப்பான்.

"இந்தக் காரணங்கள் போன்றவைதானே, வெள்ளையரை வெளியேற்றுவதற்குச்சொல்லப்பட்டது?

"இப்போது மட்டும் நிலைமை என்ன?

"உத்தியோகம் பெற முன்பு ஆங்கில மொழி; இப்போது இந்தி மொழி பயிலவேண்டும்—நியாயமா?

"முன்பு கவர்னர்பதவிகளை வெள்ளையர் அவர்களுக்குப் பிடித்தமானவர்களுக்கு தந்து லட்சக்கில் சம்பளம் தந்தனர்—இப்போதும் அப்படியே!

"முன்பு இரும்பு, மருந்து, துணி இவை சீமையிலிருந்து வந்தன—இப்போது வட நாட்டிலிருந்து வருகின்றன.

"வெள்ளையரை விரட்டுவதற்காகக் காட்டிய காரணங்களைக் காட்டிலும், இப்போது நாங்கள், 'வடவர் ஆதிக்கம் தொலைய வேண்டும்,' என்பதற்காகக் காட்டும் காரணம், எந்தவகையில் குறைந்தவை?

"கோடிக்கணக்கான ரூபாய் செலவில் திட்டங்கள் தீட்டி வடநாடு வளமாகிறது-தென்னுடு தேய்கிறது. இங்கிருப்பவர் தேயிலைத் தோட்டங்களுக்கு கூலிகளாய் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இந்தக் கேவலமான நிலை நீங்க, திராவிடம் தனியாவதைத் தவிர வேறென்ன வழி?

"வடநாட்டுடன் திராவிடம் சேர்ந்திருப்பதால், 'நமக்கு என்ன லாபம்,' என்பதைச் சொல்ல முடியாவிட்டாலும், 'நமக்கு எவ்வளவு நஷ்டம்,' ஏற்படுகிறது என்பதையாவது உணர வேண்டாமா?

"இப்படிக் காரணங்களைக் காட்டி, நாம் திராவிடநாடு கேட்கும்போது, 'தரமாட்டோம்' என்று மட்டும் எப்படிச் சொல்லிவிட முடியும்?

"பாகிஸ்தானைத் தாராமலிருந்தாலாவது, காங்கிரஸ்காரர்களுக்கு விவேகமில்லாவிடினும் வீரமாவது இருக்கிறதெனக் கொள்ள முடியும்? ஆனல், பாகிஸ்தானை தந்துவிட்டு, திராவிட நாடு தரமுடியாதென்பது, விவேகமுமல்ல—வீரமுமல்ல!"

வடநாட்டுப் பொருளை வாங்காதீர்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்த சிற்றூரிலே ஆண்டு விழா கொண்டாடுவதற்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்; இந்த வட்டத்தில் கிளைக் கழகம் அதிகம் என்பதறிந்து மகிழ்கின்றேன்.

"தி. மு. கழகத்தின் மகத்தான சக்தி கண்டு மாற்றுக் கட்சிக்காரர்கள் பொருமைப்படும் அளவுக்கு நாம் வளர்ந்து இருக்கின்ருேம். எங்களுக்கு உள்ள சக்தியை நீங்கள் நல்ல முறையில் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். எங்களுக்கு எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி, பிர்லா, டாடா, பஜாஜ் ஆதரிக்கின்ற கட்சி; கவர்னர்கள் நிரம்பிய கட்சி. அந்தக் கட்சியின் தலைவர் சுரையாளர் இரண்டு மாதத்திற்கு முன்பு பேசினர்—'காங்கிரசின் கதவு திறந்துள்ளது; தி. மு. கழகத்தினர் வந்து சேரலாம்,'—என்று! காங்கிரஸ் கட்சியினர் எங்கள் வரவை எதிர்பார்க்கின்றனர். அவர்களை ஆதரித்தால்—இலாபம்: எதிர்த்தால்—சிறை, துப்பாக்கி, புத்தகத்துக்குத் தடை, தடியடி — இப்படிப் பட்ட தொல்லைகள்; இருந்தாலும், நாங்கள் காங்கிரசை எதிர்க்கின்ருேம்—ஏன்? 'காங்கிரஸ் மக்களுக்கு துரோகம்செய்கின்ற கட்சி,' என்று கருதுவதால்தான் எதிர்த்து வருகின்ருேம். அவர்களை எதிர்ப்பதால், ஆச்சாரியார் ஆட்சியில் ஏற்பட்டதைவிட, நாங்கள் நண்பராகக் கருதும் காமராசர் ஆட்சியில் தொல்லைகள் அதிகமாகும்."

★

பொதுக் கூட்ட விவரம்

கோவை மாவட்டம் உடுமலை வட்டத்தில் சல்லிப்பட்டியில் 23—2—55-ல் தி. மு. கழக ஆண்டு விழா சிறப்புடன் நடைபெற்றது. பொதுச் செயலாளர் அண்ணுதுரை, ஈ. வெ. கி. சம்பத் வருகையை முன்னிட்டு, ஒரு மைல் நீளத்திற்கு தோரணங்களும், வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. ஊர்வலமொன்று மேளவாத்தியம் முழங்க நடைபெற்றது.

சரியாக 7-30 மணிக்கு தோழர் நாராயணன் தலைமையில் கூட்டம் துவங்கியது. எல்லோரையும் வரவேற்று தோழர் ராமநாதன் உரை நிகழ்த்தினர். தோழர் இரா. தங்கவேலு கொடி உயர்த்தினர். பின்னர் தோழர்கள் ஈரோடு-அப்பாவு, உடுமலையான் ஆகியவர்கள் பேசிய பின் தோழர் அ. பொன்னம்பலனர் சமுதாய நிலை குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரசியல் நிலை குறித்து உணர்ச்சி மிக்க பேசினர்.

பொதுச் செயலாளர் அண்ணுதுரை, கழக இலட்சியங்கள் குறித்து நீண்டதோர் உரையாற்றினர். பல கிளைக் கழகங்களின் சார்பில் தலைவர்களுக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டது. 'நம் நாடு' வளர்ச்சிக்கு வெஞ்சமடை கிளை ரூ. 2—8—0; விசுவாசதம் ரூ. 2; உடுமலை தி. மு. கழகம் 101 அணு; திருமூர்த்தி மில்ஸ் தோழர்கள் ரூ. 2—அளித்தனர். கழக செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கடந்த ஆண்டில் கிடைத்த மொத்த சுங்க, யூனியன் எச்சைஸ் வருமானம் ரூ. 188,86,00,000 ஆகும். 1954 ஏப்ரல்—டிசம்பரில், அவ்வருமானம் மூலம் ரூ. 201,44,00,000 கிடைத்தது.

திருக்குறள் வகுப்பு

1—3—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில், 'கூடாவொழுக்கம்' என்ற அதிகாரத்தை, திரு. மயிலை சிவமுத்து, திருமதி சாரதாம்பாள் ஆகியோர் விளக்கிப் பேசுவர்.

சென்னை சர்க்கார் வரவு-செலவுத் திட்டம்

துண்டு விழும் தொகையைச் சரிகட்ட புதிய வரிகள்

மூன்ரும் படிவம் முடிய இலவசக் கல்வி

சென்னை அரசாங்கத்தின் 1955—56-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை நிதிமந்திரி சுப்பிரமணியம் சட்ட சபையில் தாக்கல் செய்திருக்கிருர்.

ரெவினியூ கணக்கில் மொத்த வருமானம் ரூ. 47 கோடி 92 லட்சம் என்றும், செலவு ரூ. 49 கோடி 58 லட்சம் என்றும், துண்டு விழும் தொகை ரூ. 1 கோடி 66 லட்சம் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

துண்டு விழும் தொகையை புதியதாக விதிக்கவிருக்கும் வரிகள் மூலம் சரிக்கட்ட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நஞ்செய், புஞ்செய், தோட்ட நிலங்கள் முதலிய எல்லா வகை நிலங்களுக்கும் தீர்வையில் எட்டில் ஒரு பங்கு (ரூபாய்க்கு இரண்டணு) சேர்த்து உபரி வரி விதிக்கப்படவிருக்கிறது.

இந்த வரி மூலம் ரூ. 75 லட்சம் வருமானம் கிடைக்குமாம்.

புகையிலை வரி ரத்தானதிலிருந்து புகையிலைப் பொருள்களுக்கு வரி இல்லாமலிருக்கிறது; எனவே, இனி புகையிலைப் பொருளுக்கும் பொது விற்பனை வரி விதிக்கப்படும்.

காலணுவுக்கும் குறைவான விலையில் விற்கப்படும் சிகரெட்டுகளுக்கு விற்பனை வரி உண்டு.

விற்று முதலில் 100-க்கு 5 சதவிகிதம் இந்த வரி விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் 50 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்குமாம்.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இறைச்சி, மீன், காய்கறிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இப்போது வெங்காயம், உருளைக்கிழங்கு, வெற்றிலை, வாழைஇலை ஆகியவற்றிற்கும் விற்பனை வரி விதிப்பினின்றும் விலக்களிக்கப்படுகிறது.

ரூ. 1,200 வரை வருட வருமானம் பெறும் எல்லோரையும், சாதி வகுப்பு வேற்றுமையின்றி ஏழைகளாகப் பாவித்து அவர்களது குழந்தைகளுக்கு முதல் வகுப்பிலிருந்து மூன்ருவது படிவம் முடிய பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தகுந்த முக்கியமான சலுகையாகும்.

இதனல் பள்ளிகளுக்கு ஏற்படும் சம்பள வசூல் நஷ்டத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் ஊழியருக்கு இதுவரை ஓய்வு நாட்களை மூன்று மாதங்கள் வரை சேர்த்துக் கொள்ளலாம் என்றிருந்ததை இப்போது நான்கு மாதங்கள் வரை சேர்த்துக் கொள்ளலாம் என்ற மற்ருெரு சலுகையும் தரப்பட்டிருக்கிறது.

வரவு-செலவுத் திட்டம் பற்றிய புள்ளி விபரங்கள் தரப்படுகின்றன:—

ரெவினியூ கணக்கில், சென்னை சர்க்காரின் 1955—56-ம் ஆண்டைய புதிய வரிகள் உட்பட வருமானமும், செலவும் அடங்கிய கணக்கு இங்கு தரப்படுகிறது:—

வரவு	ரூ.	: 47,92,06,900
செலவு		: 49,58,17,600
துண்டு விழும் தொகை		: 1,66,10,700

செலவு இனங்கள்

ரெவினியூ செலவுக்கான மானியங்கள்	ரூ.	: 54,64,64,800
மூலதனச்செலவு		: 19,98,44,400
கடன் பட்டுவாடா		: 22,02,51,000
ஆக மூன்றிலுமாக		: 96,65,60,200

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

43-வது வட்ட தி. மு. கழக 4-வது ஆண்டு விழா

வெங்கிடாசல முதலி தெரு, (மீர்சாகிப்பேட்டை) பிள்ளையார் கோவில் பின்புறத் திடலில்

1—3—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. எம். கண்ணபிரான்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
ஏ. கே. வில்வம்

★

மதுரை

சுப்ரமணியபுரம் (பூங்கா அருகில்)

2—3—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
எஸ். முத்து

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம்.ஏ.